உ

சிவகுகமயம்.

கொலை மறுக்குஞ் சிந்து.

இஃது

தென்பரம்பைப்

பொன்னம்பலக் கவிராய ரவர்களால்

இயற்றப்பெற்று

ஜீவகாருண்யச் செல்வர்களின்

பொருளுதவியால்

தேவகோட்டை
வைசியமித்திரன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1924.

சிவகுருமயம்.

நேரிசை வெண்பா.

கோட்டையம் மன்விழவிற் கூத்தாடி வாளெடுத்தே
ஆட்டைவெட் டாதீரென் றுரைக்கும்-பாட்டிசைக்கக்
குஞ்சரமு கக்கடவுள் கோதடக்கும் வல்லபிரான்
கஞ்சமலர்ச் சேவடியே காப்பு.

(ஆண்டிப்பண்டாரம் உன்னை வேண்டிக்கொண்டேனே)
என்ற மெட்டு

பல்லவி.

ஆட்டை வெட்டாதீர் பவ
மூட்டை கட்டாதீர் ஐயனே

கண்ணிகள்.

1. நாட்டிற்பு கழ்மிகுத்த
நண்பர்க ளேபணிந்து
கோட்டையம்ம னுக்கென்றெண்ணிக்
கோழி யுட னேது ணிந்து (ஆ)

கந்தமூ லங்களையே
காதலித் துப்புசிக்கும்
சந்ததமு மானிடரே
தஞ் சமென வசிக்கும் (ஆ)

3. வெட்டவெட் டத்தடுக்கா
மேதினி போற்பொறுக்கும்
கட்டுக்க டங்கிநிற்கும்
காப்பா ரென் றேயிருக்கும் (ஆ)

4\. பெற்றெடுத்த மக்களைப் போற்
பேணிநீ ரிரையூட்டி
பற்றற்று ணவிரும்பும்
பசிக் காக வாட் டீட்டி (ஆ)

5\. கூப்பிடும் போ தெல்லாம்வருந்
கொல்வாரென் றெண்ணாது
காப்பிட்ட தைக்கழற்றிக்
கடப்ப தகற் கொண் ணாது (ஆ)

6\. விண்பால்வ ருந்துயரை
விலக்கினொ லாடுவெட்டி
புலைத்தொழு வோமம்மணி
யுத்த மியே யென்று சுட்டி (ஆ)

7\. ஆகாய மெங்களுக்கே
யானானு னக்கிரண்டு
மேதாவி யானகிடாய்
வெட்டு வோமெ னத்தி ரண்டு (ஆ)

8\. இன்னாருக் கின்னபடி
என்னத்த லைமேலே
அந்நாளெ ழுதியது
அழியு மோவிக் கொலை யாலே

9\. பகுத்தறி வைத்தந்தனர்
பரமன்ம னுக்களுய்ய
செகுத்துயிர் வதஞ்செய்து
தின்னற் கன் றன் றய்ய (ஆ)

10\. தன்னுயிர்போ லேவுலக
மன்னுயிர்க்குச் சாதகத்தைப்

பன்னனல மென்றுணர்ந்தும்
பார்ப்ப தோயிப் பாதகத்தை (ஆ)

11. ஒழுக்கந்த ழுவிற்குல
முயருமென் பதுமெய்யே
இழுக்கடை யாதுதவ
மியற் றுமி துதா னய்யே (ஆ)

12. சைவசமயம்முத்தி
சாதிக்கு மென்பதாலே
மெய்யறிவா ளர்களெல்லாம்
விலக்குகின் றார்புலாலை (ஆ)

13. எண்ணுக்கொ லைபுரிவோ
ரிவ்வுலகத் தாவிகளைப்
பண்ணப்ப டுநரகிற்
பாவி களிற் பாவி களே. (ஆ)

14. ஆவிகளை யாதரிப்போ
ரடைவார றவினையே
பாவிகளா கச்செகுப்போர்
படு வார்பி றவினையே (ஆ)

15. கொன்றார்கொ லச்சொல்லுவார்
கூசாம லேபுசிப்பார்
நன்றன்றெ னவிலக்கார்
நாளும் நர கில்வசிப்பார் (ஆ)

16. புன்புலா லுண்பவர்க்குப்
புலையரெ னப்பெயரே
என்றுமவ ரேழ்நரகி
லெய்தி யடை வார்துயரே (ஆ)

17. ஊனைத்தின் றூண்பெருக்கு
மூக்கங்கைக் கொண்டுநின்றே
நாணுமற் றேவதைக்கே
நல்கினேம் பழியே தென்றே (ஆ)

18. கொல்லாவி ரதனைக்கை
கூப்புமு யிர்மனத்தே
நல்லார வரேயென்ன
நன் குணர்ந் துங்க ளைத்தே. (ஆ)

19. ஆயிரம்யா கஞ்செயினு
மந்தோஎன் பயனின்றே
மாயிருஞா லத்துயிரை
வதை யாதிருத்த னன்றே (ஆ)

20. நாய்கழுகோ டெறும்பு
நற்கூகை நரிகாகம்
பேயிவைகட் கேயுணவாம்
பிணத்தி லுங்கட் கேன் மோகம் (ஆ)

21. ஊறுகா யிற்புழுவந்
துற்றல ருவருப்பு
நாறும்பு லாற்புசிக்க
நாளு முங்கட் கேன்வி ருப்பு (ஆ)

22. பாச்சைசோ றில்விழுந்தாற்
பழித்தகற் றுவீர்முன்னே
வாச்சதென மலம்புசிக்கும்
வாரணத்தை யுண்ப தென்னே (ஆ)

23. பிணத்தைக்க லத்திலிட்டுப்
பெருக்கவுண் பீர்கூவிந்தே

பிணங்கிடந் தாலுண்பது
பேதகமென் பீர்கள் விந்தை (ஆ)

24. தின்பார்க ளில்லையட்ட
திக்கினுமென் ருனுவந்து
என்பார்பு லால்தருவோ
ரில்லை யில்லை கொண்டு வந்து (ஆ)

25. கட்டுவீர் பட்டினுடை
கருதுவீர் சிவநாமம்
வெட்டுவீ ராடுகோழி
வீணேயீ தென்ன நேமம் (ஆ)

26. பூசுவீர் வெண்ணீறு
பூண்பிரு ருத்ராட்சம்
ஆசைபு லாலினுங்கட்
கந்தோ வெங் கண் மோட்சம் (ஆ)

27. பண்ணுவீர் ஜெபதவங்கள்
படிப்பீரே தேவாரம்
உண்ணுவீர் பிணப்புலா
லுங் கட்கிங் கேது தீரம் (ஆ)

28. கண்ணிறுக மூடி நிட்டை
காட்டுவீர் பூவறிய
எண்ணமனு தினமுங்கட்
கேற் குங்கொலைபுரிய (ஆ)

29. சிவயோக சாதனையைச்
செய்வோமெ னத்துணிவீர்
தவத்திற்கா காவிடக்கை
தள் ளாத தாற் றணிவீர் (ஆ)

30. நேயமொடு சிவபெருமான்
நிமலன்பெ யரைச்சொல்லும்
வாயாற்பு லால்விழுங்க
வழக் கேது நில்லும் நில்லும் (ஆ.

31. மாவிளக்குப் பஞ்சாமிர்தம்
வழங்கும்பா லபிஷேகம்
தேவிகோட்டை யம்மனுக்கே
செய்யிற் பெறு வீர்கள் யோகம் (ஆ.

32. வெண்பொங்கற் பாற்பொங்கல்
விரும்புஞ்சர்க் கரைகலந்தே
பண்ணும்பொங்க லுஞ்சமைத்துப்
படைப் பீர கம கிழ்ந்தே (ஆ.

33. துள்ளுமா வைக்குவித்து
தூபம்மிக மூளவேற்றி
வள்ளளங்களிற் பானக்கத்தை
வைத்துப் பணி வீர்கள் போற்றி (ஆ.

34. தேங்காயு டைத்துக்கனி
திருத்தித்தீ பங்கொடுத்துப்
பாங்காயர்ச் சனைசெய்வீர்
பன் நன்ம லர்தொ டுத்து (ஆ.

35. தெங்கிளநீர்களைக்கண்
திறந்தமைத் துமகிழ
மங்களஞ்சே ரம்மன்பதம்
வணங் கிவாழ் வீர்பு கழ (ஆ.

36. கொல்லாத வரேதெய்வம்
கொல்லாத வரேநல்லோர்

கொல்லாத வரறவோர்
கொல் லாத வரே வல்லோர் (ஆ)

37. பொன்னம்ப லக்கவிஞன்
புனிதனிச் சிந்தெடுத்தே
சொன்னானின் னிசையொடு
சீரு திமு றைதொ டுத்தே (ஆ)

38. கொல்லாவி ரதமதை
யெல்லோருங் கொண்டாடி
வல்லான்வ குத்தபடி
வருவீர்நல் வழி தேடி (ஆ)

39. கோட்டையம்மன் வாழிவாழி
குஞ்சரமு கத்தன்வாழி
நாட்டார் நகரத்தாரும்
நன்மை பெற்று வாழ்க வாழி (ஆ)

40. காந்திமகான் வாழிவாழி
கற்போர்கேட் போரும்வாழி
ஏந்துமர சாட்சியர்க
ளென் றென்றும் வாழிவாழி. (ஆ)

முற்றிற்று.